
# வுழூஃ, தயம்மும், குளிப்பு ஆகியவற்றின் முறைகள்

2


## வுழூஃ செய்யும் முறை

வுழூஃ செய்பவருக்கு தனது உள்ளத்தில் தான் வுழூஃ செய்யப்போகிறேன் என்கின்ற எண்ணம் ஏற்பட வேண்டும். பின்னர் பிஸ்மில்லாஹ் என்று கூறி இரு கைகளையும் மணிக்கட்டு வரை கழுவிக்கொள்ளவார்.



1

பின்னர் வலது உள்ளங்கையில் தண்ணீர் எடுத்து நன்றாக வாய் கொப்பளித்து துப்பிவிடுவார். பின்னர் மூக்கின் இரு துவாரங்களுக்குள்ளும் தண்ணீரை எடுத்து, தன்னுடைய இடது ஆட்காட்டி விரலையும் பெருவிரலையும் மூக்கின் மீது வைத்து அதனை மூக்கில் இருந்து வெளியேற்றிவிடுவார்.




2

பின்னர் முகத்தைக் கழுவிக்கொள்வார். அதாவது வழமையில் தலைமுடி முளைக்கின்ற இடங்களிலிருந்து இரு தாடைகள் முடியும் வரை மேலிருந்து கீழாகவும் இரு காதுகளுக்கு இடையில் அகலத்திலும் கழுவிக்கொள்வார்.



3

பின்னர் இரு கைகளையும் விரல் நுனிகளில் இருந்து முழங்கைகளுடன் சேர்த்துக் கழுவிக்கொள்வார். வலதுகையை ஆரம்பமாகும் பின்னர் இடது கையையும் கழுவிக்கொள்வார்.




4

பின்னர் முழு தலையையும் தண்ணீரைத் தொட்டு தடவி ('மஸ்ஹ்'செய்து)கொள்வார் . தனது இரு கைகளையும் முன் தலையிலிருந்து பிடரி வரை ஓடிச் சென்று பின்னர் முன் தலை வரை திருப்பிக் கொண்டுவருவார்.




5

பின்னர் தனது இரு ஆட்காட்டி விரல்களையும் இரு காதுகளின் ஓட்டைகளிலும் செலுத்தி, காதுகளின் மேற்புறத்தில் பெருவிரலால் 'மஸ்ஹ்' செய்து கொள்வார்.



6

பின்னர் இரு கால்களையும் கரண்டைக் கால்களுடன் சேர்த்துக்கழுவிக்கொள்வார்.



7

- மார்க்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவை விட அதிகப்படுத்துவதின் சட்டம் என்ன?

வுழூஃ செய்வதில் மார்க்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவை விட அதிகப்படுத்துவது கூடாது. அதாவது [பேணுதல் என்ற அடிப்படையில்] மூன்று முறைகளை விட அதிகமாக கழுவுதல், முழங்கைக்கு மேலே இருக்கின்ற தோள்பட்டையை கழுவுதல், கரண்டைக் காலுக்கு மேலுள்ள கெண்டைக் காலைக் கழுவுதல், கழுத்தை மஸ்ஹ் செய்தல் போன்றவை.



8

- வுழூஃ செய்து முடிந்ததற்கு பிறகு பின்வரும் துஆவை ஓதிக் கொள்வார் :

"أَشهَدُ أَنَّ لا إِلَهَ إِلا اللّهُ وَحدَهُ لا شَرِيكَ لَهُ ، وَأَشهَدُ أَنَّ مُحَمَّداً عَبدُهُ وَرَسُولُهُ"

திர்மிதியின் அறிவிப்பில் மேலதிகமாக பின்வரும் வார்த்தை இடம்பெற்றுள்ளது.

"اللَّهُمَّ اجعَلنِي مِنَ التَّوَّابِينَ واجعَلنِي مِنَ المُتَطَهِّرِينَ".

9

- வுழூஃவை முறிக்கும் காரியங்கள் :

1- முன் பின் துவாரங்களில் இருந்து வெளிப்படக்கூடியவை. சிறுநீர், மலம், காற்று போன்றவை.
2- தூங்குவதன் மூலமாக அல்லது மயக்கம் ஏற்படுவதன் மூலமாக புத்தி நீக்குதல்.
3- ஒட்டக இறைச்சி சாப்பிடுதல்.


10

## தயம்மும் செய்யும் முறை

தண்ணீர் கிடைக்காததன் காரணமாக அல்லது தண்ணீரை பயன்படுத்துவதனால் கேடு விளையும் என்று பயந்ததன் காரணமாக சுத்தம் செய்ய வேண்டிய உறுப்புகளில் தண்ணீரைப் பயன்படுத்த முடியாமல் போனால் தண்ணீரால் சுத்தம் செய்வதற்குப் பகரமாக தயம்மும் அமையப்பெறும். அப்போது தண்ணீருக்குப் பகரமாக மண் பயன்படுத்தப்படும்.


1

தயம்மும் செய்வதற்கான எண்ணம் உள்ளத்தில் வரவேண்டும். பின்னர் பிஸ்மில்லாஹ் என்று கூற வேண்டும். பின்னர் ஒருமுறை பூமியில் இரு உள்ளங்கைகளையும் அடித்து, இரு உள்ளங்கைகளாலும் முகத்தையும் இரு கைகளின் மேற்புறங்களையும் மணிக்கட்டு வரை மஸ்ஹ் செய்ய வேண்டும்.




2

மண்ணில் அடிக்கும் போது விரல்களை விரித்து இருக்க வேண்டிய அவசியமில்லை. மண்ணினால் கைகளை 'மஸ்ஹ்' செய்யும்போது விரல்களை குடைய வேண்டிய அவசியமுமில்லை.



3

## கட்டாயமான குளிப்பின் முறை

குளிப்புக்குரிய எண்ணம் உள்ளத்தில் வர வேண்டும். சப்தமின்றி பிஸ்மில்லாஹ் என்று கூற வேண்டும். பின்னர் முழு உடம்பிலும், அடர்த்தியற்ற மற்றும் அடர்த்தியான முடிகளுக்குக் கீழாலும் கூட தண்ணீர் படுமாறு செய்ய வேண்டும். அத்தோடு வாய் கொப்பளித்து, மூக்குக்கும் தண்ணீர் செலுத்தி கழுவி விட வேண்டும்.

1

- குளிப்பைக் கட்டாயமாக்கக்கூடிய காரியங்கள் :

1- ஜனாபத்: இந்திரியம் வெளிப்பட்டால் அல்லது இரு பால் உறுப்புக்களும் சந்திக்கும் விதத்தில் உடலுறவு கொண்டால் ஜனாபத் எனும் நிலை ஏற்படும். 2- ஹைழ் மற்றும் நிபாஸ் இரத்தங்கள் வெளிப்படுதல். 3- ஷஹீத் அல்லாத மரணம். 4- காஃபிர் இஸ்லாத்தை ஏற்றல்.

2

தயாரிப்பு : கலாநிதி ஹைஸம் ஸர்ஹான், (மஸ்ஜிதுன் நபவியின் முன்னாள் ஆசிரியர், அஸ்-ஸுன்னஹ் கலாசாலையின் மேற்பார்வையாளர்: « mahadsunnah.com »

இதனை விரும்பியவர்கள் பதிவிடலாம், வெளியிடலாம், விநியோகிக்கலாம்.
மொழிபெயர்ப்பை பெற்றுக்கொள்வதற்கு: sarhaan.com அல்லது பார்க் கோடை ஸ்கேன் செய்யவும்.

Tamil
تاميلي
01/18

# நபி -ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்- அவர்களின் தொழுகை முறை

1


இமாம், மற்றும் தனி நபர் ஒரு சுத்ராவை (தடுப்பை) முன்னால் வைத்துத் தொழுவது சுன்னாவாகும். மேலும் இமாமுக்கான சுத்ரா (தடுப்பு) அவருக்குப் பின்னால் இருப்பவர்களுக்கும் சுத்ராவாகும்.

தொழுபவர் ஸஜ்தா செய்யும் இடத்தின் மீது தன் பார்வையை நிலைநிறுத்துவார், அங்குமிங்கும் திரும்பிப்பார்க்கமாட்டார்.



1

தொழுபவர் தனது கால்களுக்கிடையே உள்ள இடைவெளியை தனது தோள்களுக்கு இடையே உள்ளதைப் போலவே, கூட்டாமலும் குறைக்காமலும் வைத்து பாதங்களின் வெளிப்புறத்தை சமமாக்குவார்.



2

அவர் தொழுகையின் நிபந்தனைகளை நிறைவேற்றிய பிறகு, கைகளை காதுகளுக்கு அல்லது தோள்புஜங்களுக்கு நேராக உயர்த்தி, விரல்களை விரிக்காது சேர்த்தவண்ணம், உள்ளங்கைகள் கிப்லாவை நோக்கியவாறு "அல்லாஹு" அக்பர்" என்று கூறுவார்.



3

பின்னர் அவர் தனது வலது உள்ளங்கையின் உட்புறத்தை இடது கையின் மணிக்கட்டின் மேல் வைத்து, அதை அவரது நெஞ்சில் கட்டிக்கொள்வார், அல்லது மணிக்கட்டின் மேல் வைத்த கையை இறுகப்பிடிக்கவும் முடியும்.



4

பின்னர் அவர் முதல் ரக்அத்தில் மட்டுமே தொழுகையின் தொடக்க துஆவை ஓதுவது விரும்பத்தக்கது. மேலும் தொடக்க துஆக்களில் நபி (ஸல்) அவர்கள் ஓதியதாக வந்துள்ள துஆக்களை தெரிவு செய்து ஓதுவது மிக்க நன்று. அவற்றில் இதுவும் ஒன்றாகும்:

ஸுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக்க வதபாரகஸ்முக வதஆலா ஜத்துக்க வலா இலாஹ கைருக்க.


பின்னர், அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம் என்று கூறுவார்.

பின்னர், பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்" எனக்கூறி சூறா அல்-ஃபாத்திஹாவை அதன் வசனங்கள், வார்த்தைகள், எழுத்துகள் மற்றும் ஹரகத்துகளுடன் வரிசையாக ஓதவேண்டும்.

பின்னர் அவர் அஊது... எனக்கூறாமல் குர்ஆனில் இருந்து அவருக்கு முடியுமானதை ஓதுவார். மேலும் அவர் சூராவின் ஆரம்பத்தில் மட்டும் பிஸ்மில்லாஹ் எனக் கூறுவார்.

5

பின்னர் ஆரம்ப தக்பீரில் கைகளை உயர்த்தியது போன்று உயர்த்தி, "அல்லாஹு"அக்பர்" என்று கூறி ருகூஃ செய்வார், பின்னர் முழங்கால்களைப் பிடித்து, முழங்கைகளை மடக்காமல், முதுகைத் தலைக்கு சமமாக நிமிர்த்தி, ஒரு முறை கட்டாயமாக "ஸுப்ஹான ரப்பியல் அழீம்" எனக் கூறுவார் மற்றும் மேலதிகமாக வந்த துஆக்களையும் ஓதுவது அவருக்கு விரும்பத்தக்கது.



6

பின்னர், எழுந்து, நிமிர்ந்து நிற்பதற்கு முன், "ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதஹ்" என்று கூறுவார், அதே நேரத்தில் கைகளை காதுகள் அல்லது தோள்களுக்கு நேராக உயர்த்துவது சுன்னத்தாகும்.

அவர் நிமிர்ந்து நிலைக்கு வந்துவிட்டால், (ரப்பனா லகல்ஹம்து) என்று கூறுவார். மேலும் மேலதிகமாக வந்த துஆக்களையும் ஓதுவது அவருக்கு விரும்பத்தக்கது.


பிறகு கைகளை உயர்த்தாமல் தக்பீர் கூறி, நெற்றி, மூக்கு, உள்ளங்கைகள், முழங்கால்கள் மற்றும் கால்விரல்கள் உட்பட ஏழு உறுப்புகளின் மீது ஸஜ்தா செய்வார்.

தனது இரண்டு கைகளையும் அவரது காது, தோள்புஜத்தின் அருகில் பூமியில் விரித்து வைக்க வேண்டும். அப்போது விரல்கள் கிப்லாவை நோக்கியிருக்க வேண்டும். பூமியில் படாமல் முழங்கையை உயர்த்தி, அவரது கையை வயிற்றில் இருந்தும் விலாப்புறத்திலிருந்தும், தொடைக்கும் முழங்கைக்கும் இடைப்பட்ட உறுப்பு தொடையிலிருந்தும் தள்ளி வைக்க வேண்டும்.



7

பின்னர் "ஸுப்ஹான ரப்பியல் அஃலா" என ஒரு முறை கூறுவது கடமையாகும். மேலதிகமாக வந்த துஆக்களையும் ஓதுவது அவருக்கு விரும்பத்தக்கது. மேலும் அவர் விரும்பிய துஆக்களையும் கேட்கலாம், குறிப்பாக நபி (ஸல்) அவர்கள் கேட்டதாக வந்துள்ள துஆக்களை கேட்பது ஏற்றமானது.



8

பின்னர் கையை உயர்த்தாமல் தக்பீர் சொன்னவராக தலையை உயர்த்துவார். அப்போது இடக்காலை விரித்து வலக்காலை நட்டி, விரல்கள் கிப்லாவை நோக்கி இருக்க உட்காருவார். பின்னர் கிப்லாவை நோக்கி தனது விரலை விரித்தவராக அவரது முட்டுக்கருகில் தொடையில் கையை வைப்பார். அப்போது "ரப்பிஃ பிர்லீ" எனக் கூறுவார். தொழுகையில் உட்காரும்போது இம்முறையில்தான் உட்கார வேண்டும். ஆனால் மூன்று அல்லது நான்கு ரக்அத் தொழுகைகளில் கடைசி அத்தஹிய்யாத்தில் இருக்கும்போது மாத்திரம் இருப்பை மாற்றி இடது காலை வலது காலுக்கு கீழால் வைத்து உட்கார வேண்டும்.



9

பின்னர் தக்பீர் கூறி முதலாவது செய்தது போன்று இரண்டாவது ஸுஜூத் செய்வார். பிறகு தக்பீர் சொல்லி இரண்டாவது ரக்அத்துக்கு எழுந்து முதல் ரக்அத்தில் செய்ததைப் போலவே செய்வார், இரண்டாவதில் தொடக்கத் தக்பீரோ தொடக்க துஆவோ கிடையாது.



இரண்டாவது ஸஜ்தாவை முடித்ததும் அத்தஹிய்யாத்துக்காக அமர்வார்.

அவர் தனது ஆள்காட்டி விரலால் சுட்டிக்காட்டி, நடு மற்றும் பெருவிரலை ஒன்றுடன் மற்றதை சேர்த்து, ஆள்காட்டி விரலை அசைத்து துஆ கேட்பார்.



இந்த அமர்வில் அத்தஹிய்யாத் எனும் பின் வரும் பிரார்த்தனையை கூறவேண்டும். அத்தஹிய்யாது லில்லாஹி வஸ்ஸலவாத்து வத்தய்யிபாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யுஹன் நபிய்யு வரஹ்மதுல்லாஹி வபரகாத்துஹு. அஸ்ஸலாமு அலைனா வஅலா இபாதில்லாஹிஸ் ஸாலிஹீன் அஷ்ஹது அல்லாஇலாஹ இல்லல்லாஹு" வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு" வரஸூலுஹு"

(அதனைத் தொடர்ந்து ஸலவாத்து ஓதவேண்டும்)


அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீதுன் மஜீது - வபாரிக் அலா முஹம்மதின் வஅலா ஆலி முஹம்மதின் - கமா பாரக்த அலா இப்ராஹீம வஅலா ஆலி இப்ராஹீம இன்னக்க ஹமீதுன் மஜீத்

பின்னர் நான்கு விடயங்களை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுவார்: நரக வேதனை, கப்ர் வேதனை, வாழ்வு மரணம் இவ்விரண்டால் ஏற்படும் ஃபித்னா, தஜ்ஜாலின் ஃபித்னா ஆகியவை.

பின்னர் விரும்பிய துஆக்களை ஓதுவார். அதில் "என் இறைவா! உன்னை நினைவு கூறவும் நன்றி செலுத்தவும் அழகிய முறையில் உன்னை வணங்கவும் உதவிடு" எனும் துஆவை ஓதுவது மிக ஏற்றமானது.

பிறகு வலது புறம் முகத்தைத் திருப்பி அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹ் என்று கூற வேண்டும். பிறகு இடது புறம் முகத்தைத் திருப்பி அது போன்றே ஸலாம் கூற வேண்டும். முகத்தை மாத்திரம் திருப்ப வேண்டும் தோற்புயங்களை திருப்பக் கூடாது. மேலும் தலையை மேல் நோக்கியோ அல்லது கீழ் நோக்கியோ உயர்த்தவோ பணிக்கவோ கூடாது.

(இத்துடன் 2 ரகஅத் உடைய தொழுகை நிறைவடையும்)



10

தொகுப்பு: கலாநிதி ஹைஸம் ஸர்ஹான், மஸ்ஜிதுன் நபவியில் ஆசிரியர், அஸ்-ஸுன்னஹ் கலாசாலையின் மேற்பார்வையாளர்.

பதிப்பு, வெளியீட்டு, விநியோக உரிமைகள் அனைவருக்கும் அனுமதி.
கையேட்டின் மொழிபெயர்ப்பிற்கு: sarhaan.com அல்லது பார்கோடை ஸ்கேன் செய்யவும்.